<u>**In the Court of the  District Munsif, Eraniel**</u>

**Original Suit No.  138/2012 Date:26.02.2026.**

**(DW3)-  ராஜசேகர்**

<u>**வாதி** தரப்பு குறுக்கு  விசாரணை</u>

1. நான் எனது முதல் விசாரணையில் 99 வருடங்களுக்கு முன்பு நடந்த சங்கதி பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இரட்டைகரை சானல் வருவதற்கு முன்பு செருப்பன்கோடு என்ற ஊர்  சம்பந்தமான  வரைபடமோ அல்லது வேறு ஆவணங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செருப்பன்கோடு அருள்மிகு ஸ்ரீ சுடலை மாடசுவாமி கோவில் சம்பந்தமான ஆவணங்கலும் பழைய பத்திரங்களும் தாக்கல் செய்துள்ளேன். நான் குறிப்பிட்டவாறு எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. இரட்டைகரை சானலுக்கு இருபுறமும் உள்ள மக்கள் ஒரே குடும்பத்து மக்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. குருந்தன்கோடு கிராம சர்வே எண் 215,216,217 ஆகிய சர்வே எண்னின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்களுக்கு எத்தனை நபர்களின் பெயரில் பட்டா உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண் 215 ரவிந்தர், செல்லத்துரை, சுதகார், சுப்பிரமணியன், செல்வகுமார், சிவகுமார், மாயதேவி, சரோஜ, ரபேல் ராஜ், ராஜன், மணிகன்டன் மேலும் சில நபர்கள் பெயர் குறிப்பிட்டுள்ளது. எனக்கு மேற்படி சர்வே எண் பற்றி எந்த விபமும் தெரியாது என்றால் சரிய்லல.

3. நெட்டான்கோடு பஞ்சாயத்தில் செருப்பன்கோடு என்ற ஊர் இருப்பது சம்பந்தமான அரசு ஆவணங்கள் நான் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், வீட்டு வரி ரசீது , தண்ணிர் வரி ரசீது பார்த்துள்ளேன். நெட்டான்கோடு பஞ்சாயத்தில் எத்தனை குக்கிராமங்கள் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும் 8 கிராமங்கள் உள்ளது. ஊசிக்காட்டு சிவ சுடலை மாடசுவாமி கோவில் நங்கன்விளையில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, செருப்பன்கோட்டில் உள்ளது. நான் குறிப்பிடுவது போல் செருப்பன்கோடு ஊர் இரண்டாக பிரிந்திருந்தால் நெட்டான் கோடு பஞ்சாயத்தில் குக்கிராமம்  பதிவேட்டில் செருப்பன்கோடு பெயர் இடம்பெற்றிருக்கும் என்றால் சரிதான், பெயர்

இடம்பெற்றிருக்கிறது.

4. வாதி ஊரின் பெயைர மாற்றி பிரச்சனை செய்வதாக குறிப்பிட்டுள்ளேன் அது சம்பந்தமாக மனு ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் எனது ஊர் சார்பாக கொடுத்துள்ளார்கள். அவ்வாறான எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றாலும் எனவே தான் மேற்படி மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் கட்டிமான்கோடு கிராம பஞ்சாயத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் குறிப்பிடும் கட்டிமான்கோடு கிராம பஞ்சாயத்து, செருப்பன்கோட்டில் சுமார் எத்தனை வீடுகள் அமைந்துள்ளது என்றால் சுமார் 200 வீடுகள் உள்ளது.

5. வாதி நங்கன் விளையில் வசித்து வருகிறார்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார்கள் ஆனால் நான் குறிப்பிடுவது போல் வாதி சுப்பிரமணியபுரத்தில் வசித்து வருவதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி வாடகை வீட்டில் இருந்ததை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வாதி வாடகை வீட்டில் இருந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். அவரது வீட்டு கதவு எண் என்ன என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.32 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த பின்பு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

6. கட்டிமான்கோடு ஊர் மக்கள்அவர்களது அடையாள அட்டையை பயன்படுத்தி நங்கன்விளை ஊரில் சொத்து வாங்கிய ஆவணங்களை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சார் பதிவாளர் நாங்கள் தாக்கல் செய்யும் ஆவணங்கள் அடிப்படையில் தான் பத்திரம் பதிவு செய்வார்கள் என்றாலும் ஊர் பற்றி விபரங்களை பதிவு செய்யமாட்டார்கள் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் ஊரின் பெயரை நிரூபிக்கும் ஆவணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது என்றாலும் நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் பொய் என்றாலும் 3, 4 பிரதிவாதிகள் எனது உறவினர் என்பதால் அவர்களுக்காக வேண்டி பொய்யாக சாட்யிம் அளிக்கிறேன் என்றாலும் அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இரணியல்.